நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : இடைநிலை – மேற்பிரிவு

## Level : Intermediate - Upper

***June 2013***

வினாக்கள் : 55

வழங்கப்படும் நேரம் : 65 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களைத் தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

**வினாக்கள் 1–10 : பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு மிகச்சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

## உலகம் போற்றும் லியனாடோ டாவின்சி

லியனாடோ டாவின்சி என்றதும் நம் எல்லோருடைய நினைவுக்கும் வருவது மோனோலிசா ஓவியமும் அதன் மர்மமான இரகசியப் புன்னகையும் தான். உண்மையில் டாவின்சி ஒரு நல்ல ஓவியர் மட்டுமல்ல மிகத்திறமையான அறிவியல் ஆய்வாளர். பல ஆராச்சிகளைச் செய்து புதிய கண்டுபிடிப்புகளுக்கான குறிப்புகளும் விளக்கப்படங்களும் எழுதி வைத்த தீர்க்கதரிசி. சிறந்த கடடிடக்கலை வல்லுனர். புதுமையான போர்க்கருவிகளை வடிவமைத்த இராணுவப் பொறியியலாளர். இசைக்கலைஞர், தத்துவஞானி இன்னும் மருத்துவம் புவியியல், வானியல், தாவரவியல் போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனைகள் செய்த சகலகலா வல்லவர் என்கிற தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

எந்நேரமும் ஆராச்சியில் ஈடுபட்டுக் கொண்டு அதே நினைவாக உலவி வந்த டாவின்சியை மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று ஊரவர் நினைத்தனர். அவர்களுடைய கேலியிலிருந்து தப்புவதற்காகவே டாவின்சி தன்னுடைய குறிப்புகளை கண்ணாடி எழுத்து முறையில் எழுத ஆரம்பித்தார் என்று சொலுகிறார்கள். கண்ணாடி எழுத்துமுறை என்பது எழுதிய தாளை கண்ணாடியில் காண்பித்து அதன் பிம்பத்தை வாசித்தால் அதன் விபரம் விளங்கும். எழுதியதாளை நேரில் பார்த்தால் ஒன்றும் புரியாது.

கி.பி 1452 இல் இத்தாலியில் வின்சி என்ற சிறிய ஊரில் பிறந்த டாவின்சி, பிடிவாதமாக இடது கையால் எழுதி வந்தார். அறுபத்தேழு ஆண்டுகள் இவ்வுலகில் பிரமச்சாரியாகவே வாழ்ந்தார்.

வெர்ரோக்கியா என்ற புகழ்பெற்ற ஓவியரின் சீடராக டாவின்சி தன் வாழ்க்கையைத் தொடங்கி, தன்னை உன்னதமான ஓவியராக உருவாக்கிக் கொண்டார். இன்று டாவின்சியின் பெயர் சொல்ல நமக்குக் கிடைத்திருப்பது மோனாலிசா, கடைசி உணவு என்னும் பைபிள் காட்சி, பாறையின் கன்னி (Virgin of the Rocks) போன்ற சிலவே.

ஆடிக்கடி தமக்குள் சண்டையிட்டுக்கொண்டிருந்த இத்தாலி நாட்டின் சிற்றரசுகளுக்காக டாவின்சி புதிய போர்க்கருவிகளை வடிவமைத்தார். பெருநகரங்களில் நோய்களால் மக்கள் பெருமளவில் இறப்பதைக் கண்டு ஆராய்ந்து சுகாதார வழிமுறைகளையும் சாக்கடை போன்றவற்றைக் கட்டுவதற்கான புதிய கட்டிட அமைப்புகளையும் செய்து தந்தார். மருத்துவத்துறையில் ஆர்வம் இருந்ததால் மருத்துவர்களைச் சந்தித்து உடல் உறுப்புக்களைத் தெளிவாகப் படம் வரைந்து வைத்தார். இன்றைக்கும் அவை மருத்துவத்துறையின் பொக்கிஷங்களாகும்.

டாவின்சி வாழ்ந்த காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருந்த சக்கரங்கள், திருகாணிகள், கியர்கள் ஆகியவற்றைக் கொண்டு புதிய கருவிகளைச் சிந்தித்துப் படமாக வரைந்தார். பராசூட், ஹெலிகொப்டர், நீர் ஏற்றும் பம்பு, பீரங்கி, மெஷின்கள் போன்ற பல கண்டுபிடிப்புகளின் முன்னோடி டாவின்சி ஆவார். உண்மையில் பராசூட் கண்டு பிடிக்கப்பட்டது 1783 இல், ஆனால் டாவின்சி 1485 இலேயே அதற்கான வரைபடத்தை வரைந்து விட்டார்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

1. லியனாடோ டாவின்சி யார்?
   a) ஓவியர்
   b) தீர்கதரிசி
   c) இராணுவப் பொறியியலாளர்
   d) இவையாவும் சரி

2. டாவின்சி என்றதும் நம் நினைவுக்கு வருவது எது?
   a) அடமின் உருவாக்கம் (The creation of Adam)
   b) ரெம்பெஸ்ற் (Tempest)
   c) மோனாலிசாவின் ஓவியம்
   d) சென்ற் ஜோர்ஜ்யும் ட்ரகனும் (saint George and the Dragon)

3. டாவின்சியை ஊரவர் எப்படி நினைத்தனர்?
   a) சிறந்த சாதனையாளரென்று
   b) மனநிலை பாதிக்கப்பட்டவரென்று
   c) தீர்க்கதரிசியென்று
   d) சகலகலாவல்லவரென்று

4. லியனாடோ எழுதியது
   a) பிநெயில் எழுத்து முறையில்
   b) கண்ணாடி எழுத்து முறையில்
   c) அராபிய எழுத்து முறையில்
   d) இவையாவும் சரி.

5. டாவின்சி எந்த நூற்றாண்டில் வாழ்ந்தார்?
   a) பதின்நான்காம் நூற்றாண்டில்
   b) பதினைந்தாம் நூற்றாண்டில்
   c) பதினாறாம் நூற்றாண்டில்
   d) பத்தொன்பதாம் நூற்றாண்டில்

6. டாவின்சியின் குருவாக அமைந்த ஓவியர் யார்?
   a) றிவேயல் (Raphael)
   b) மைக்கலஞ்சலோ
   c) யொட்டி செலி (Batticelli)
   d) வெர்ரோக்கியா

7. டாவின்சியின் பெயர் சொல்ல நமக்குக் கிடைத்திருக்கும் ஓவியங்கள்?
   a) மோனாலிசா, கடைசி உணவு என்னும் பைபிள் காட்சி, பாறையின் கன்னி.
   b) மோனாலிசா, அடமின் உருவாக்கம், ரெம்பெஸ்ற்.
   c) மோனாலிசா, ரெம்பெஸ்ற், பாறையின் கன்னி.
   d) மோனாலிசா, சென்ற் ஜோர்ஜ்யும் ட்ரகனும, ரெம்பெஸ்ற்.

8. டாவின்சி யாருக்காக புதிய போர்க்கருவிகளை வடிவமைத்தார்?
   a) ரோமானியப் பேரரசுக்காக
   b) ரோமானியப் சிற்றரசுக்காக
   c) இத்தாலி நாட்டின் சிற்றரசுகளுக்காக
   d) வெனிஸ் நகர சிற்றரசுக்காக

9. மருத்துவத்துறையின் பொக்கிஷங்களாக விளங்குபவை டாவின்சியின்
   a) மருத்துவக் குறிப்புகள்
   b) உடல் உறுப்பு வரைபடங்கள்
   c) மருத்துவர்களுடன் உரையாடிய குறிப்புகள்
   d) இவையாவும் பிழை.

10. பராசூட்டிற்கான வரைபடத்தை டாவின்சி எப்போ வரைந்தார்?
   a) கி.பி 1485 இல்
   b) கி.பி 1783 இல்
   c) கி.பி 1452 இல்
   d) கி.பி 1566 இல்

**வினாக்கள் 11–15 : பின்வரும் கவிதையை வாசித்து அதன் கீழ் காணப்படும் வினாக்களுக்கு மிகச்சரியான விடையைத் செய்க.**

சூது வாது வஞ்சம் பொறாமை
இவற்றில் எதையும் அறியாதவனாய்
முழையை நம்பி விதை விதைத்து
கடலை நம்பி வலை விரித்து

கடவுளை நம்பி காத்திருந்து
அடுத்த வேளாமைக்கு வகை தெரியாது
அன்றாடங் காச்சியாய் அல்லல் பட்டும்
போது மென்ற பொன்மனத்தோடு

சுற்றம் பேணி சூழலைக் காத்து
மொழியொடு கலைகலாச்சாரம் வளர்த்து
மகிழ்ச்சிதரவல்ல மனநிறைவோடு
வாழ்ந்தான் அன்று பண்டைத்தமிழன்

11. பண்டைத்தமிழன் ‘‘இவற்றில் எதையும் அறியாதவனாய்’’ இருந்தான் என்று கவிஞர் கூறுபவை எவை?

a) சூது வாது
b) வஞ்சம்
c) பொறாமை
d) மேற்சொன்ன யாவும்.

12. எதை நம்பி விதை விதைத்தான்?

a) கடைமை
b) மழையை
c) ஆற்றை
d) நீரை

13. ‘‘அன்றாடங் காச்சியாய் அல்லல் பட்டும்’’ என்ற வரி காட்டும் வாழ்க்கை எப்படிப்பட்டது?

a) தினமும் உழைத்துப் பெற்ற வருவாயில் தினமும் உண்டு வாழ்வது.
b) தினமும் உழைத்துப் பெற்ற வருவாயை சேமித்து வாழ்வது.
c) வருவாய் இல்லாமல் உணவின்றி வாடி வாழ்வது
d) மேற்கூறிய யாவும் சரி.

14. அன்றாடங் காச்சியாய் வாழ்ந்தாலும் எப்படிப்பட்ட மனதோடு வாழ்ந்தான் என்று கவிஞர் காட்டுகின்றார்?

a) வேண்டுமென்ற பொன் மனத்தோடு
b) போதுமென்ற பொன் மனத்தோடு
c) வேண்டாம்மென்ற வெண் மனத்தோடு
d) இவை யாவும் பிழை.

15. மகிழச்சிதரவல்ல மனநிறைவு எப்படி வந்தது?

a) சுற்றம் பேணியதால்
b) சூழலைக் காத்ததால்
c) மொழியோடு கலைகலாசாரம் வளர்ந்ததால்
d) இவையாவும் சரி.

**வினாக்கள் 16–20 : பின்வரும் வாக்கியத்தில் தவறாக எழுதப்பட்ட சொல் எது?**

16. பல நூற்றாண்டுகள் ஆனாலும் கம்பீரம் சிறிதும் குலையாமல் எலிலுடன் காட்சி தருகிறது செஞ்சிக் கோட்டை.
    a) கம்பீரம்
    b) குலையாமல்
    c) எலிலுடன்
    d) தருகிறது

17. சீராளன் பரக்கவிட்ட பட்டம் பரவையில் அமிழ்ந்தது.
    a) பரக்கவிட்ட
    b) பரவையில்
    c) அமிழ்ந்தது
    d) பட்டம்

18. பசி எடுத்தால் மட்டுமே சாப்பிடுவதை பலக்கமாக்கிக் கொள்ளுங்கள்.
    a) சாப்பிடுவதை
    b) பலக்கமாக்கிக்
    c) மட்டுமே
    d) கொள்ளுங்கள்

19. தஞ்சைப் பெரியகோயில் ராஜராஜசோளனால் கட்டப்பட்டது.
    a) தஞ்சை
    b) பெரியகோயில்
    c) ராஜராஜசோளனால்
    d) கட்டப்பட்டது

20. களுகுகள் வலிமையான கால்நகங்களையும் பலமான சிறகுகளையும் கொண்டவை.
    a) களுகுகள்
    b) வலிமையான
    c) சிறகுகளையும்
    d) கொண்டவை

**வினாக்கள் 21–25 : பின்வரும் வாக்கியங்களில் விடுபட்ட சொற்களைத் தெரிவு செய்க?**

21. கற்றோர்க்குச் ______________________________ இடமெல்லாம் சிறப்பு.
    a) சென்ர
    b) சென்ற
    c) செந்ற
    d) செந்ர

22. உலகச் செம்மொழிகளில் உயர்தனிச் ______________________ நம் தமிழ்மொழி.
    a) சிரப்புடையது
    b) சிரப்பிடையது
    c) சிறப்புடையது
    d) சிறப்பிடையது

23. ஐம்பெரும்காப்பியங்களில் ____________________ சிலப்பதிகாரம்.
    a) முதன்மையானது
    b) முதண்மையானது
    c) முதன்மையாநது
    d) முதண்மையாணது

24. விஞ்ஞானம் கண்ட ________________________அணு ஆயுதக் கண்டு பிடிப்பு குறிப்பிடத்தக்கது.
    a) வின்தைகளில்
    b) விண்தைகளில்
    c) விந்தைகலில்
    d) விந்தைகளில்

25. புத்தகங்களைப் படிக்கும் ________________________ உள்ளவர்கள் ஒருபோதும் தனிமை உணர்வைப் பெறுவதில்லை.
    a) பலக்கம்
    b) பளக்கம்
    c) பழக்கம்
    d) பழக்காம்

**வினாக்கள் 26–28 : பின்வரும் கூற்றுகளுக்குப் பொருத்தமான பழமொழிகளைத் தெரிவு செய்க.**

| |
|---|
| a) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. |
| b) ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு. |
| c) தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு வரை. |
| d) முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். |

26. ஒற்றுமையே பலம் தரும்.
27. இளமையில் அறிவது எல்லாம் என்றும் எம்முடன் கூடவரும்.
28. எவ்வளவு விளையாட்டின் மத்தியிலும் உனது குறிகோளை தவறாது.

**வினாக்கள் 29–30 : பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

| |
|---|
| a) இளங்கோவடிகள் |
| b) கம்பன் |
| c) மகாகவி பாரதியார் |
| d) நவாலியூர் சோமசுந்தரப்புலவர் |

29. ‘‘கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கேனும் கண்டதில்லை’’.

30. ‘‘ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே’’.

**வினாக்கள் 31–35 : பின்வரும் இலக்கியப் பாத்திரப் படைப்புகளைத் தொடர்பு படுத்துக.**

| | |
|---|---|
| a) மணிமேகலை | b) மகாபாரதம் |
| c) நளவெண்பா | d) இராமாயணம் |

31. துச்சாதனன்

32. மாதவியின் மகள்

33. தமயந்தி

34. சுக்கிரீவன்

35. சூர்ப்பனகை

**வினாக்கள் 36–38 : பின்வரும் சொற்றொகுதியில் வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க.**

36. a) அழகு b) எழில் c) வதனம் d) கோலம்

37. a) அடவி b) புதர் c) காடு d) வனம்

38. a) கடவுள் b) வெய்யோன் c) ஆண்டவன் d) இறைவன்

**வினாக்கள் 39–40 : பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு பொருத்தமான தமிழச் சொற்களைத் தெரிவு செய்க.**

a) மின் அஞ்சல்

b) இறுவட்டு

c) முகப்புத்தகம்

d) மின்வலைப்பதிவு

39. Facebook

40. Email

**வினாக்கள் 41–43 : பின்வரும் இரட்டைக்கிளவிகளைப் பொருத்தமான இடங்களில் தெரிவு செய்க.**

| |
|---|
| a) ஜல் ஜல் |
| b) மடக் மடக் |
| c) பட பட |
| d) மொறு மொறு |

41. கடும் வெய்யிலில் நடந்து வந்த தாமரைச்செல்வி தாகத்தில் ____________________________________ என்று தண்ணீரைக் குடித்தாள்.

42. பாட்டி செய்து தந்த பணியாரம் ______________________________ என்று சாப்பிடச் சுவைத்தது.

43. ஆரணி காலில் அணிந்திருந்த சலங்கை ___________________________ என்று ஒலித்தது.

**வினாக்கள் 44–45 : பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கட்டதில் இருந்து தெரிவு செய்க.**

44.வயலும் வயல் சார்ந்த இடமும் எப்படி அழைக்கப்படுகிறது?

| | |
|---|---|
| a) முல்லை | b) குறிஞ்சி |
| c) மருதம் | d) நெய்தல் |

45. வெண்பா பாடுவதில் சிறந்தவராகப் போற்றப்பட்ட புலவர் யார்?

| | |
|---|---|
| a) கம்பன் | b) கபிலர் |
| c) இளங்கோ | d) பாரதியார் |

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**சொற்திறன் வினாக்கள்: 46 – 55**

**பின்வரும் உரைப்பகுதியில் கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்லை விடைத்தாளில் குறித்த எண்ணிற்கு எதிரே எழுதவும்.**

## மரங்கைளைப் பேணுவோம்.

இயற்கை நமக்கு (46)________________________________ வளங்களுள் மிக முக்கியமானது காட்டு வளமாகும். மலைவளம், நதிவளம், கனியவளம் போன்று இதுவும் (47)________________________________ செல்வமாகும்.

இயற்கையாக வளர்ந்த மரங்களை நாம் நமது (48)______________________ வெட்டுகிறோம். பெருகி வரும் (49)_________________________ தொகைக்கு ஏற்ப விவசாயம் பெருக (50)______________________________ வேண்டும். வீடுகட்ட நிலம் வேண்டும், (51)___________________________ மையங்கள், தொழில்சாலைகள் கட்டநிலம் வேண்டும். இதனால் மரங்கள் அழிக்கப்படுகின்றன.

காடுகள் அழக்கப்படுவதால் (52)_______________________________வளம் குன்றுகின்றது. மரங்கள் காபனீரொட்சைட்டை பெரிதும் உட்கொள்பவை. மரங்ளைை அழிப்பதால் காபனீரொட்சைட்டின் அளவு (53)________________ இதனால் சூழல் மாசடையும்.

அவுஸ்ரேலியாவில் மரங்கள் பாதுகாக்கப்படுகின்றன. வீட்டின் முற்றத்தில் நிற்கும் மரத்தைக் கூட (54)_______________________________ இன்றித் தறித்துவிட முடியாது. அனுமதி பெற்று நீக்கினாலும் அதற்குப்பதிலாக (55)_______________________________ மரத்தை நாட்ட வேண்டும்.